Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 57

வியாழக்கிழமை
22 ஜனவரி 2026

தை 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## வவுனியாவில் காற்று மாசு!

கொழும்பு, ஜன. 22
நாட்டில் நிலவிவரும் அசாதாரண காலநிலை காரணமாக, வவுனியாவில் காற்றின்தரம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.
அசாதாரண காலநிலை காரணமாக, நாட்டில் காற்று மாசு அதிகம் உள்ள பகுதிகள் »11

## முன்னாள் சிப்பாயின் வீட்டில் கைக்குண்டு

விரிவு பக்கம்:-07



## அரசை அசைக்கும் பலம் எதிர்க்கட்சியிடம் இல்லை

### அமைச்சர் வித்யாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 22
ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசை அசைக்கும் பலம் எதிர்க்கட்சிகளிடம் இல்லை என்று, அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நெருக்கடி நிலையில் இருந்த நாட்டையே நாம் பொறுப்பேற்றோம். இதற் »11

### பரந்தன்

## இரசாயனத் தொழிற்சாலை; மீள நிர்மாணிக்க அடிக்கல்!

கிளிநொச்சி, ஜன. 22
40 வருடங்களுக்கும் மேலாக, இயங்காதநிலை காணப்படும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை, மீள நிர்மாணிப்பதற்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது. »11

## தமிழ் மக்களுக்கு எதிராக தாம் போராடவில்லையாம்!

### நாமல் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 22
இலங்கையில் இடம்பெற்ற ஆயுதப் போராட்டம் விடுதலைப்புலிகளுக்கு எதிராகவே இடம்பெற்றது. மாறாக, தமிழர்களுக்கு எதிராக நாம் போராடவில்லை - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஸ்ரீலங்காப் படைகள் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராகவே »11

### அத்துமீறிய மீன்பிடிக்காக

## இலங்கைக் கடற்படையால் 7 தமிழக மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 22
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், தமிழக மீனவர்கள் 7 பேர் வடக்குக் கடற்பரப்பில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கையின் கடற்பரப்புகளில் பாதுகாப்பு »11

## அஸ்வெசும பயனாளிகளின் உதவித்தொகை அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 22
இலங்கையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது.
நாடாளு »11

## இந்த ஆண்டின் 19 நாள்களில் விபத்துகளில் 120 பேர் சாவு

விரிவு பக்கம்:-05



## யாழ்ப்பாணம் வருகிறது ரி20 உலகக்கிண்ணம்!

கொழும்பு, ஜன. 22
ரி20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் இலங்கையில் இடம்பெறவுள்ள நிலையில், தொடருக்கான கிண்ணம் யாழ்ப்பாணத்துக்கும் எடுத்துவரப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
ரி20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் ஆட்டங்கள் இம்முறை இலங்கையிலும் »11

## போதையால் சிறைகளில் நெருக்கடி

விரிவு பக்கம்:-03



முச்சந்தி முரளி

"அப்ப கனபேருக்கு கசிப்புத்தான் வாழ்வாதாரமா மாறிப்போட்டுது கண்டியளோ"

### கிளிநொச்சியில் கடந்தவருடம்

## கசிப்பு சார் குற்றங்கள் மூவாயிரம் பேர் கைது!

கிளிநொச்சி, ஜன. 22
கிளிநொச்சியில் கடந்த வருடம் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட நபர்கள் கசிப்பு சார்ந்த குற்றச் செயல்களுக்காக நடவடிக்கைக்கு உட்பட்டுள்ளனர்.
கிளிநொச்சியில் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட போதைக்கு எதிரான நடவடிக்கை »11

### உள்ளூராட்சி மன்றங்களின்

## அதிகாரத்தைப் பறிக்கும் சூழ்ச்சிதான் பிரஜாசக்தி!

### வலி.வடக்குத் தவிசாளர் சுகிர்தன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 22
உள்ளூராட்சி மன்றங்களுக்கு என, அரசியலமைப்பால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பறிக்கும் சூழ்ச்சியே பிரஜாசக்தித் திட்டம் என்று வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சுகிர்தன் குற்றஞ்சாட்டியுள்ளார்.
மயிலிட்டியில் நேற்று நடை »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரசபைத் தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பு எச்சரிக்கை!

**கொழும்பு, ஜன.22**

**நாடளாவிய ரீதியில் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி பணிப்புறக் கணிப்பு மேற்கொள்ளப்படும் என்று மின்சாரத் தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.**

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பின்கீழ் மின்சாரசபை ஊழியர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு வலுசக்தி அமைச்சு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் இலங்கை மின்சாரசபை சுதந்திரச்சேவைச் சங்கத்தின் பொதுச் செயலாளர் பிரபாத் பிரியந்த தெரிவித்ததாவது-

இலங்கை மின்சாரசபையை முற்றாக நீக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தலில் கையெழுத்திடுவதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. மின்சாரசபைச் சட்டத்திலும், உயர்நீதிமன்ற உத்தரவிலும் இந்த நடைமுறைக்கு செல்ல முன்னர் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதை ஒத்திவைக்கவேண்டும் என்று வலுசக்தி அமைச்சரையும் அரசாங்கத்தையும் வலியுறுத்துகின்றோம். கடந்த வாரம் இது தொடர்பாக 8 காரணிகளை வலியுறுத்தி வலுசக்தி அமைச்சருக்கு எழுத்துமூல கோரிக்கையொன்றை கையளித்திருக்கின்றோம். ஆனால் அமைச்சரிடமிருந்து அதற்கு எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை. எம்முடன் கலந்தாலோசிக்காது இவ்வாறு ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நாடளாவிய ரீதியில் பணிப்புறக் கணிப்பு மேற்கொள்வோம் - என்றார். (எ-இ)

## குறைபாடுகளை நிவர்த்திசெய்து கல்விச் சீர்திருத்தம் மேற்கொள்க

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து



கொழும்பு, ஜன.22

புதிய கல்விக்கொள்கையை நாம் எதிர்க்கவில்லை. கொள்கைத் திட்டத்தில் காணப்படும் குறைகளை நிவர்த்திசெய்துகொண்டு புதிய கல்விக்கொள்கையை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் புதிய கல்விக் கொள்கை அமுல்படுத்தப்பட வேண்டும். அதற்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்-என்றார். (எ-இ)



### மகிந்தானந்த, நளின்

## மேன்முறையீட்டு மனு மார்ச் 9 இல் விசாரணை

கொழும்பு, ஜன.22

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்களான மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகியோர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுக்களை மார்ச் 9ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

தங்களுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தண்டனைக்கு எதிராக இவர்கள் இருவரும் மேன்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

இதேவேளை 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது லங்கா சதொச நிறுவனத்தின் ஊடாக 14 ஆயிரம் கரம்போர்ட் உள்ளிட்ட பொருள்களை இறக்குமதி செய்ததன்மூலம் அரசாங்கத்துக்கு 50 மில்லியன் ரூபாவுக்கும் மேலாக இழப்பு ஏற்படுத்தியதாகத் தெரிவித்து மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)




## ஐரோப்பிய ஆணையாளருடன் பிரதமர் ஹரிணி சந்தித்துப் பேச்சு

பெர்ன், ஜன.22

சர்வதேச பங்களிப்புக்கான ஐரோப்பிய ஆணையாளர் சப் சிகேலாவுடன், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பேச்சு நடத்தியுள்ளார். உலகப் பொருளாதாரமன்ற மாநாட்டில் பங்கேற்பதற்காக சுவிட்சர்லாந்து சென்றுள்ள பிரதமர், அங்கு முக்கியத்துவமிக்க சந்திப்புகளை நடத்தி வருகின்றார். உலகப் பொருளாதாரமன்ற மாநாட்டிற்குச் சமாந்தரமாக இந்தச் சந்திப்புகளில் அவர் கலந்துகொள்கின்றார்.

சர்வதேச பங்களிப்புக்கான ஐரோப்பிய ஆணையாளர் சப் சிகேலாவைச் சந்தித்து ஆக்கபூர்வமான இருதரப்புப் பேச்சு வார்த்தையொன்றை முன்னெடுத்தேன். பொருளாதார மீட்சி, கல்விச்சீர்திருத்தம், டிஜிற்றல் பரிமாற்றம், காலநிலை சகிப்புத் தன்மை மற்றும் நிலையான அபிவிருத்தி ஆகியவற்றில் இலங்கை ஐரோப்பிய ஒன்றிய ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பாக நாம் கலந்துரையாடினோம். இலங்கையின் சீர்திருத்த நிகழ்ச்சிநிரல் மற்றும் நீண்டகால வளர்ச்சி பற்றிய முன்னுரிமைகளுக்கு ஆதரவளிப்பதற்கான தனது உறுதிப்பாட்டை ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் உறுதிப்படுத்தியது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். (எ-44)

## இந்து சமுத்திர கடலோர அரசுகளின் கூட்டணியில் இணைய அங்கீகாரம்!

இந்து சமுத்திர கடலோர அரசுகளின் கூட்டணியை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதற்குரிய யோசனையை கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் அமைச்சரவையில் முன்வைத்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்ததாவது-

சூரை மீன் (Tuna fish) மீன்பிடித் தொழிலானது இந்து சமுத்திர வலயத்தின் தேசிய பொருளாதாரம், உணவுப் பாதுகாப்பு என்பவற்றுக்கு அதிகளவில் பங்களிப்பு வழங்குகின்றது. அதேபோல தொழில் உருவாக்கம் மற்றும் கடலோர சமூகத்தவர்களின் சமூக பொருளாதார உறுதிப்பாட்டுக்கும் உந்துசக்தியாக அமைந்துள்ளது.

எனினும், அதிகளவான மீன்களைப் பிடிப்பதால் மீன்கள் குறைவடைந்து உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே, சூரை மீன் வளங்கள் முகாமைத்துவத்தில் ஒத்துழைப்புகளைப் பலப்படுத்துவதற்காக இந்து சமுத்திரத்தின் கடலோர அரசுகளின் கூட்டணியை உருவாக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. பங்களாதேஷ், இந்தோனேசியா, ஈரான், மடகஸ்கார், மலேசியா, மாலைதீவு, மொசம்பிக், பாகிஸ்தான், சோமாலியா, தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை போன்ற நாடுகளுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றின் மூலம் இதனை உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. உறுப்பு நாடுகளுக்கிடையே ஒத்துழைப்புகளை அதிகரித்தல், மீனவ சமூகத்தவர்களின் வாழ்வாதாரத்தை அதிகரித்தல், இயலளவை கட்டியெழுப்புதல் மற்றும் மீன் வளங்களைப் பேண்தகு வகையில் முகாமைத்துவம் செய்தல் போன்ற நோக்கங்களுக்காகவே இந்தக் கூட்டணி உருவாக்கப்படுகின்றது. இந்து சமுத்திரத்தின் கடலோர அரசுகளின் கூட்டணியை தாபிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (எ-44)

## தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ.1,750 சம்பள உயர்வு!

### *அமைச்சரவை அங்கீகாரம்*

கொழும்பு, ஜன.22

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும்நோக்கில், 2026 வரவு -செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட சம்பள உயர்வு மற்றும் மேலதிகக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான முறைமைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி முன்வைத்த முன்மொழிவின்படி,

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த ஆகக்குறைந்த சம்பளம் ரூபா 1,550 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. வேலைக்கு வருகைதருவதை ஊக்குவிக்கும்வகையில் நாளாந்தம் ரூபா 200 மேலதிகக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2026 வரவு-செலவுத் திட்டத்தில் 5,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026 ஜனவரி முதலாம் ஆம் திகதி முதல் நடைமுறையாகும் வகையில், இந்த ஊக்குவிப்புக் கொடுப்பன்வுகள் அந்தந்த பெருந்தோட்டக் கம்பனிகள் ஊடாக தொழிலாளர்களுக்கு வழங்கப்படும். அடுத்த கட்டமாக, அனைத்துத்தரப்பினருடனும் ஆலோசித்த பின்னர், இந்தக் கொடுப்பனவுகளை நேரடியாகத் தொழிலாளர்களின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு திட்டமிட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் கைதுகளால் சிறைச்சாலைகளில் நெருக்கடி!

கொழும்பு, ஜன.22

**போதைப்பொருள் குற்றச்சாட்டுகளில் கைதுசெய்யப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளநிலையில், அனைத்துச் சிறைச்சாலைகளிலும் நெரிசல் ஏற்பட்டுள்ளது. பயன்பாட்டில் இல்லாத அரச கட்டடங்களில் சிறு குற்றங்களுடன் தொடர்புடைய கைதிகளைத் தற்காலிகமாகத் தடுத்துவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**


நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் இந்த நெருக்கடி நிலை காணப்படுகிறது. போதைப்பொருள் குற்றச்சாட்டுகளின் கீழ் கைதுசெய்யப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையே இதற்குக் காரணம்.

அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் சேவையில் காணப்படும் ஊழியர் பற்றாக்குறையால் போதைப்பொருள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிப்பதில் தாமதம் காணப்படுகிறது. இதனால் சிறைச்சாலையில் போதைப் பொருள் குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு பிணை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் சேவைக்கு 52 பேரை புதிதாக இணைத்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலதிகமாக 32 பேரை சேவையில் இணைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)



## ‘சீரி ஸ்கான்’ பரிசோதனைகள் யாழ்.போதனாவில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ‘சீரி ஸ்கான்’ இயந்திரப் பரிசோதனைகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ‘சீரி ஸ்கான்’ இயந்திரம் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாகப் பழுதடைந்த நிலையில் காணப்பட்டது. இந்த நிலையில் ‘சீரி ஸ்கான்’ திருத்தப்பட்டதையடுத்து ‘சீரி ஸ்கான்’ பரிசோதனைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன. (ச-66,17)

## வெற்றிலை மென்று வியாபாரம்; வியாபாரிக்கு எதிராக வழக்கு!

வடமராட்சி, ஜன.22

பருத்தித்துறை மீன் சந்தையில் வெற்றிலை மென்றவாறு வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட மீன் வியாபாரிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நகரசபை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மீன் வியாபாரி வெற்றிலை, பாக்கு மென்றவாறு வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டமை நேரடியாக அவதானிக்கப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பருத்தித்துறை பொது மீன் சந்தையில் வெற்றிலை உமிழ்ந்த மீன் வியாபாரிகள் சிலருக்கு எதிராக முன்னதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் தண்டப்பணம் அறவிடப்பட்டிருந்தது. (எ-100)



## கஸ்ஸப தேரர் ரிட்மனு

திருகோணமலை, ஜன.22

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் பலங்கொட கஸ்ஸப தேரர் உள்ளிட்ட இரண்டு பிக்குகளை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதவான் பிறப்பித்த உத்தரவை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இதன்படி, ரிட் மனுவை பரிசீலனைக்காக எதிர்வரும் 22 ஆம் திகதி அழைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. பலங்கொட கஸ்ஸப தேரர் உள்ளிட்ட இரண்டு பிக்குகளினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## மன். பிரதேசசபை அமர்விலிருந்து வெளியேறிய 6 உறுப்பினர்கள்!

மன்னார், ஜன.22

மன்னார் பிரதேசசபையின் 8ஆவது அமர்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றநிலையில், இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் சுயேச்சைக்குழு உறுப்பினர்கள் ஆறு பேர் அமர்வில் இருந்து வெளிநடப்புச்செய்துள்ளனர். கடந்த ஏழு சபை அமர்வுகளில் முன்வைக்கப்பட்ட எந்த ஒரு அபிவிருத்திச் செயற்பாடுகளையும் தவிசாளர் செயற்படுத்தவில்லை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைத்து அவர்கள் வெளிநடப்புச் செய்துள்ளனர்.

புயல் அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு பிரதேசசபைகளுக்கான அரசாங்க நிதி ஒதுக்கீடு மன்னார் பிரதேசசபைக்குக் கிடைக்கவில்லை.

மன்னார் பிரதேசசபைக்கு உட்பட்ட இடங்களில் பல்வேறு அனர்த்த சம்பவங்கள் நடந்திருந்தாலும், கோரிக்கை முன்வைக்கப்படாமையால் நிதி பெறப்படவில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஐ-56)




## பப்பாவில ஏத்தாதையுங்கோ!

சும்மா இருக்கிறவையை பப்பாவில ஏத்தி விழுத்தி அதில ஒரு சுகம் காணுறதெண்டது எங்கட ஆக்களிட்ட இருக்கிற பொல்லாத வருத்தம். ஆராவது ஒராள் முன்னுக்கு வருகுதெண்டால் அது இவைக்கு கண்ணுக்குள்ள குத்துமே தவிர, மனசுக்குள்ள ஒருநாளும் இனிக்காது. அதால எப்பிடியாவது அவையின்ர வளர்ச்சியைத் தடுக்கிறதுக்கு உள்ளடி வேலையளைச் செய்வினம். அதிலை ஒண்டுதான் உந்தப் பப்பாவில ஏத்துறது. பப்பாசி மரம் பாக்கத்தான் உருப்படியா உயர்ந்து நிக்கும். ஆனால் அதின்ர உச்சிக்கு ஏற நினைச்சால் கவிண்டு கொட்டுண்ட வேண்டியதுதான். அப்பிடி இஞ்ச முன்னேற நினைக்கிறவையை கண்டபடி புளுகித்தள்ளி, இல்லாட்டி அவைக்கு இதைவிட நல்ல சான்ஸ் இருக்கெண்டு ஆசைகாட்டி படுகுழிக்குள்ள தள்ளுறதைத்தான் பப்பாவில ஏத்திறதெண்டு சொல்லுவினம். இந்தக்கிழமை லண்டனில நடந்த ஒரு சம்பவத்தைப் பாக்கேக்க, எங்கட ஊர்ப்பெடியன் வாகீசனையும் அப்பிடிச் சிலர் பப்பாவில ஏத்தி விழவைக்க நினைக்கினமோ எண்டு டவுட் வருகுது.

வாகீசனுக்கு நல்ல குரல்வளத்தோட, கற்பனை வளம், கவிதை வளமெல்லாம் இருக்கு. வாகீசனின்ர ‘ரப்’ பாட்டுக்கு மயங்காதவை ஆருமில்லை. இஞ்சையிருந்து இந்தியாவரைக்கும் வாகீசனுக்கு ரசிகர்மார் நிறையப்பேர் இருக்கினம். சினிமாப்படங்கள் சிலதுக்கும் அவர் பாடியிருக்கிறார். ஒரு படத்தில நடிச்சுக் கொண்டுமிருக்கிறார். சன் ரீவியில நடந்த சமையல் புரோக்கிராமில பங்குபற்றினதால் இன்னும் பேமஸாகிட்டார். அதுக்குப் பிறகு இப்ப கிட்டடியில அவர் முருகனை நினைச்சுப் படிச்ச ‘வண்ணமயிலேறி...’ எண்ட பக்திப்பாட்டும் பட்டி தொட்டியெல்லாம் பரவி, வாகீசனைத் தெரியாத ஆக்களே இல்லை எண்டளவுக்கு வந்திட்டுது. இப்பிடிப்பட்ட நிலையில, அவரை லண்டன் பார்லிமெண்டில நடக்கிற பொங்கல் விழாவுக்கு, பாட வரச்சொல்லி ரிக்கெற் எல்லாம் அனுப்பி கூப்பிட்டவை. ஆனால் அங்க போன வாகீசனை, வாசலில நிண்ட செக்கியூரிட்டிமார் பார்லிமெண்டுக்கு உள்ளுக்க போகேலாது எண்டு திருப்பி அனுப்பிப் போட்டினம். இதைவைச்சு இங்கிலாந்து அரசாங்கமே வாகீசனைக் கழுத்தைப் பிடிச்சு வெளியில தள்ளின மாதிரி, சிலர் வாகீசனை பேஸ்புக்கில கழுவி ஊத்துகினம்.

ஆனால் விசயம் என்னெண்டால், எங்கட ஊரில இப்ப ஆர் நினைச்சாலும் ஆயிரத்து ஐநூறு ரூபா கட்டினால், முத்திரை வெளியிடலாம் எண்ட மாதிரி, லண்டன் பார்லிமெண்டிலையும் ஆர் காசு கட்டினாலும், அங்க ஒரு மண்டபத்தை வாடகைக்குக் குடுப்பினம். அப்பிடி ஒரு மண்டபத்தை வாடகைக்கு எடுத்த யாழ்ப்பாணக்காரர் சிலர், இந்தமுறை அங்க பொங்கல்விழா செய்தவை. அதுக்குத்தான் வாகீசனைக் கூப்பிட்டவை. மற்றும்படி இங்கிலாந்து அரசாங்கம் கூப்பிடவுமில்லை, அவமானப்படுத்தவுமில்லை. வாகீசனைப் பாட்டுப்பாடக் கூப்பிட்டவை, அதுக்கேத்தபடி அவரை உள்ளுக்க கூட்டிக்கொண்டுபோற ஏற்பாட்டையும் செய்திருக்கவேணும். அவையின்ர அரைகுறை ஏற்பாட்டாலதான் அண்டைக்கு வாகீசனால உள்ளுக்க போகேலாமல் போட்டுது. ஏற்கனவே லண்டனில வாகீசன் பாடப் போகப்போறர் எண்டதும், சில முந்திரிக்கொட்டையள் ‘இங்கிலாந்து அரண்மனையில பாட வரச்சொல்லி வாகீசனுக்கு அந்த நாட்டு அரசாங்கம் அழைப்பு விட்டிருக்கு’ எண்டு ஓவரா புளுகிப் பப்பாவில ஏத்தினவை. அப்பிடிப் புளுகினவை வாகீசனை சரியானபடி அங்க அனுப்பி, நிகழ்வில பாடுறதுக்கும் அலுவல் பார்த்திருக்கோணுமெல்லோ. லண்டன் பார்லிமெண்டுக்கும் அரண்மனைக்கும் வித்தியாசம் தெரியாதவை அழைப்புக் குடுத்தால் இனிமேல் எந்தக் கலைஞர்மாரும் அங்க போறதைப் பற்றி ஒண்டுக்கு ரண்டுதரம் யோசியுங்கோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகாரைச் சொத்துகளில் கைவைக்க வேண்டாம்!

## ரணில் எச்சரிக்கை

கொழும்பு. ஜன.22

நாட்டின் ஆட்சியாளர்கள் பௌத்த மதத்தைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளனர். தற்போதைய ஆட்சியாளர்கள் அப்பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ளமுடியாது என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அந்நியர் ஆட்சிக் காலத்தில்கூட பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. விகாரைகள் மற்றும் தேவாலயங்கள் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கமைய விகாரைகளுக்குச் சொந்தமானவை விகாரைகளுக்கும், தேவாலயங்களுக்குச் சொந்தமானவை தேவாலயங்களுக்கும் உரியனவாகும். அவற்றில் கைவைத்தால் நாட்டுக்கு என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியாது - என்றார். (ச-இ)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 21 . 08 . 1956



மறைவு 25 . 12 . 2025

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு கடந்த 25.12.2025 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**அமரர் பரமானந்தம் சூரியகுமாரி (பவா)**

அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.01.2026) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் "கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 24.01.2026 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தாவடி வடக்கு, தாவடி.

குடும்பத்தினர்.

(CS 60459) A



## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 02 . 1935



மறைவு 19 . 01 . 2026

**சிவசுப்பிரமணியம் கமலாதேவி**

மட்டுவில் வடக்கு, சிவன் கோவிலடி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் கமலாதேவி அவர்கள் கடந்த 19.01.2026 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சிவசந்திரிக்கா, சிவச்சந்திரன், சிவதர்சினி, சிவநேசன் (பகி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவமைந்தன், மோகன்ராஜ், ராஜிகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நவீன், பிரஜான், நிவேஸ் நெல்சன் ஏவா, லீனா ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2026) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தொட்டியடி தூவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


சிவன் கோவில் வீதி,
மட்டுவில் வடக்கு, மட்டுவில்.

தகவல்: குடும்பத்தினர்.
076 081 6243

(CS 60514) A



## 24 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**திரு. ஐயம்பிள்ளை நடராசா**

(மைதிலி நகைமாட ஸ்தாபகர்)

22.01.2026

பிறப்பு 14.04.1947

இறப்பு 17.01.2002

அன்பின் சிகரமே
வாழ்வின் ஒளிவிளக்கே
எம் குடும்பத்தலைவனே!
எம் வாழ்வின் வழிகாட்டிய தீபமே!
காற்றிலே கலந்து ஆண்டுகள் இருபத்திநான்கு ஆனாலும்
காலடி தழைக்கும் உம் நினைவுகள்
எம் மனத்திரையினுள்ளே முளையரும்பி கொடியாய்
மலர்ந்து மணம் வீசியபடி இன்னும் இருக்கிறீர்கள்
தோளிலே தெளித்த பாசத்தூறல்கள்...
வாழ்வில் ஆயிரமாயிரம் கண்கள் ஓரம்
கண்ணீர் துளிகளாய் நீங்கள்..
தீண்டும் பொருளெல்லாம்
நீங்கள் தானே அப்பா - மறைந்து
ஆண்டுகள் இருபத்திநான்கு ஆன போதும் சிறகிழந்து
தவிக்கிறோமே அப்பா
இருபத்திநான்கு ஆண்டுகள் என்ன
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவலைகள் என்றும்
எம் நெஞ்சினில் நீங்காமல் நிலைத்திருக்கும்...
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

"சிவசனுஜாஸ் இல்லம்"
இல. 55,
அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
உரிமையாளர் -
மைதிலி நகைமாடம் (Pvt) Ltd) - யாழ்ப்பாணம்.
யாழ்மைதிலி ஜீவலர்ஸ் - கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை





## இனவாதப்பேய்களுக்கு இல்லையா தடை?

தேரவாத பௌத்தம் ஆபத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. தேரர்களைச் சிறையில் அடைக்கும் அளவுக்கு நாட்டில் இருள் சூழ்ந்துள்ளது. சிங்கள மக்களின் பொறுமைக்கு ஓர் எல்லையுண்டு என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ளவேண்டும் என்றவாறாகத் தெரிவித்திருக்கின்றார் முன்னாள் 'பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்' சரத் வீரசேகர. எப்போதெல்லாம் 13ஆவது திருத்தம் தொடர்பில் பேசப்படுகின்றதோ, எப்போதெல்லாம் சட்டவிரோத விகாரைக் கட்டுமானங்கள் சவாலுக்கு உட்படும் நிலை நேர்கின்றதோ அப்போதெல்லாம் வீரசேகர வெளிவருவார். அதைத்தாண்டிய அரசியல் என அவரிடம் எதுவும் இல்லை. இதன் தொடர்ச்சியாகவே, வீரசேகரவின் சமீபகாலக் கருத்துகளும் அமைந்துள்ளன.

வீரசேகர இனவாதக் கருத்துகளை வெளிப்படுத்துவது ஒன்றும் புதிதல்ல. அவரின் அரசியலும் வாக்குவங்கியும் இதுதான். வீரசேகர மட்டுமல்ல, கம்மன்பில, வீரவன்ஸ, மேர்வின் சில்வா போன்றோரும் இதேவகையினர்தான். முழுக்கமுழுக்க பௌத்த பேரினவாதத்தை மையப்படுத்தியதே அவர்களின் அரசியல். கோத்தாபயவின் அரசாங்கம் வங்குரோத்து அடைந்து, மக்கள் வீதிக்கு இறங்கிய காலங்களில் இவர்களின் அரசியல் அடியோடு அழியும் நிலையில் இருந்தது. அதைப் புத்துயிர்ப்புச் செய்வதற்கு எந்தவொரு வாய்ப்பும் அவர்களுக்குக் கிட்டியிருக்கவில்லை. 'தோல்வி உறுதி' என்ற அடிப்படையிலேயே இவர்களில் சிலர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது போட்டியிடாது தொலைவில் இருந்ததைப் பார்த்தோம். ஆதலால்தான், எதிர்வரும் தேர்தல்களுக்குமுன்னர், தமது இருப்பைமீட்டெடுப்பதற்காக அவர்கள் முழுவீச்சில் இனவாதத்தைக் கக்கிக்கொண்டிருக்கின்றனர். 'மக்களால் புறக்கணிக்கப்பட்ட நபர்கள்' அல்லது 'எதிர்ப்பு அரசியலைச் செய்பவர்கள்' என்ற தோரணையில் இவர்களின் கருத்துகளை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. ஏனெனில், இந்த நாட்டைப் பொறுத்தவரையில் இனவாதம் என்பது இலகுவாகப் புரியும் மொழி. அந்த இனவாதம்தான் நூற்றாண்டுகாலப் பொருளாதாரப் பின்னடைவிலும், வரலாற்றுப் பேரழிவிலும் இலங்கையைத் தள்ளியது. கடந்த மூன்று ஆண்டுகளாக அந்த இனவாதத் தீயின் வீச்சும், வேகமும் குறைந்து போயிருக்கின்றதே அன்றி, மாறாக அணைந்துவிடவில்லை. எனவே, இத்தகைய நபர்கள் வெளிப்படுத்தும் ஓயாத இனவாதக் கருத்துகள், நினையாத நேரத்தில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தவல்லவை என்பதை மறுத்துரைக்க முடியாது.


ஜனாதிபதி அநுரவும் அவருடைய சகாக்களும் கூறுவதுபோன்று, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உண்மையிலேயே இனவாதம் அற்றது என்றால், இனவாதப்பூதம் கிளர்ந்தெழும் வகையில் கருத்துகளை வெளிப்படுத்தும் நபர்களை தயவு - தாட்சணியம் இன்றித் தண்டிக்கவேண்டும். மாறாக, இனவாதக் கருத்துகளுக்கு எதிராகப் பாராமுகம் தொடரும் பட்சத்தில், அது பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும். தமிழ்த்தேசியம், தமிழர் தாயகம் தொடர்பான கருத்துகளை சமூக வலைத்தளங்களில் பதிவிடும் சாதாரண நபர்களைத் தீரவிசாரிக்கும் அரசாங்கம், பெருமளவு மக்களால் பின்பற்றப்படும் தலைவர்கள், தாம் சார்ந்த மக்களை இனவாதத்தால் நித்தமும் ஊட்டி வளர்ப்பதை அனுமதிப்பது பெரும் அபத்தம்.



### பொய்யாமொழி

**துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து**
**இறந்தாரை எண்ணிக்கொண் டற்று**

**பொருள்:** பற்றுகளைத் துறந்தவர்களின் பெருமையை அளந்து கூறுதல், உலகத்தில் இதுவரையில் பிறந்து இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடுவதைப் போன்றது.



## இந்த ஆண்டின் 19 நாள்களில் விபத்துகளில் 120 பேர் சாவு



**கொழும்பு, ஜன.22**

**இந்த ஆண்டின் முதல் 19 நாள்களில் மட்டும் 113 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன என்றும், வீதி விபத்துகளில் சிக்கி 120 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸ் போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யு. ஜி. ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-

கடந்த முதலாம் திகதி முதல் கடந்த 19ஆம் திகதிவரையான காலப்பகுதியில் விபத்துகளில் 216 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வீதி விபத்துகளில் பெரும்பாலும் பாதசாரிகளே உயிரிழந்துள்ளனர். 33 பாதசாரிகள் விபத்துகளில் உயிரிழந்துள்ளனர்.

அதிகபட்சமாக 45 மோட்டார்சைக்கிள் விபத்துகளும், 7 சைக்கிள் விபத்துகளும் பதிவாகியுள்ளன- என்றார். (எ-இ)

## ரஷ்யாவுக்கான புதிய தூதுவராக ஷோபினி

கொழும்பு, ஜன.22

ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவராக ஷோபினி குணசேகர, மொஸ்கோவில் உள்ள கிரெம்ளின் மாளிகையில் வைத்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினிடம் தனது நியமனக் கடிதத்தை உத்தியோகபூர்வமாக பெற்றுக்கொண்டார். இதன் போது டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட அழிவுகளின் போது ரஷ்யா வழங்கிய ஆதரவுக்கு இலங்கை மக்கள் சார்பில் ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவரான ஷோபினி குணசேகர தனது நன்றிகளைத் தெரிவித்தார். (ச-இ)





## மாணவி துஷ்பிரயோகம்: மாணவர்கள் மூவர் கைது

கொழும்பு, ஜன.22

கினிகத்தேனை பகுதியில் 16 வயதுடைய மாணவி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில், அவரது காதலன் உட்பட மூன்று சிறுவர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் 16 மற்றும் 17 வயதுடைய மூன்று சிறுவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவி மேலதிக மருத்துவப் பரிசோதனைகளுக்காக நாவலப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-இ)

## ஆசிரியர்களுக்கான சம்பள உயர்வு நடைமுறை

கொழும்பு, ஜன. 22

2025 வரவு -செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கு அமைய இந்த ஆண்டின் ஜனவரி முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான சம்பளம் நேற்றுமுன்தினம் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. 2025 வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளின்படி இந்த ஆண்டின் ஜனவரி 1ஆம் திகதி முதல் கல்விச்சேவை உள்ளிட்ட அரச ஊழியர்களுக்கு மீண்டும் சம்பள உயர்வு வழங்கப்பட்டது. (ச-இ)

## விசேட தேவையுடையோர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜன.22

நாட்டில் மாதாந்த உதவித் தொகையைப் பெற்றுக்கொள்ளும் விசேட தேவையுடையோரின் எண்ணிக்கை 1,42,000 இலிருந்து 2,00,000 ஆகவும் அதிகரித்துள்ளதென சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின்கீழ் அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் தொடர்பிலான விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். (ச-இ)

நாளை

வெள்ளிக்கிழமை - தை 09

23.01.2026

சுபநேரம் : 06.36 - 08.06

ராகுகாலம் : 11.06 - 12.36


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காளான் அறுவடை விழா தருமபுரத்தில் கோலாகலம்

கிளிநொச்சி, ஜன. 22
கிளிநொச்சி புளியம்பொக்கணை கமநல சேவை பிரிவுக்குட்பட்ட தருமபுரம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் காளான் செய்கை அறுவடை விழா மற்றும் புதிய காளான் கொட்டகை திறப்பு விழா ஆகியன சிறப்பாக இடம்பெற்றன.

திருமதி க.சரண்யா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், நவீன தொழில்நுட்பத்துடன் அமைக்கப்பட்ட காளான் கொட்டகை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. தொடர்ந்து, முதிர்ச்சியடைந்த காளான்கள் அறுவடை செய்யப்பட்டு செய்கையாளர்களுக்கான ஊக்கமளிக்கும் நிகழ்வுகள் நடைபெற்றன. மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடைத் திட்டத்தின்கீழ், பகுதிமானிய அடிப்படையில் பயனாளி ஒருவருக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. இதன்போது, ப.யோகநாதன் எனும் பயனாளிக்குரிய காசோலை அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டது. (ச-113)

# மகாபாரத தொடர் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன.22
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக மகாபாரத தொடர் சொற்பொழிவு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் ஆசிரியரும் சைவப்புலவருமான இரா.செல்வ வடிவேல் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார். (ச-41-66)

# கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம், ஜன.22
யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை நடத்தும் கூட்டுறவு உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் வீரசிங்கம் மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30மணி முதல் இரவு 8.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து நாளைமறுதினம் சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இந்தக் கண்காட்சி நடத்தப்படும்.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபையின் தலைவர் ப.கேசவதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அகல்யா செகராஜா முதன்மை விருந்தினராகவும், யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

கூட்டுறவு அமைப்புகளின் உற்பத்திப் பொருள்கள் காட்சிப் படுத்தப்படுவதால் சகல கூட்டுறவுத்துறையினரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-17)



# வல்லிபுரம் கந்தப்புவுக்கு கலாபூஷணம் விருது

யாழ்ப்பாணம் ஜன.22
வவுனியா உக்குளாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த மூத்த கலைஞர் வல்லிபுரம் கந்தப்புவின் நீண்டகாலக் கலைச் சேவையைப் பாராட்டி, அவருக்கு இலங்கையின் அதியுயர் அரச விருதான 'கலாபூஷணம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஆண்டுதோறும் கலைத் துறையில் மிகச்சிறந்த பங்களிப்பை வழங்கும் கலைஞர்களுக்கு இந்த அதியுயர் விருது வழங்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில், கடந்த 12ஆம் திகதி கொழும்பு அலரி மாளிகையில் நடைபெற்ற உத்தியோகபூர்வ விழாவில் இவருக்கு இந்த விருது கையளிக்கப்பட்டது. (ச-40)

# தாவடி முருகனுக்கு மஞ்சத் திருவிழா!

யாழ்ப்பாணம்,ஜன.22
தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி ஆலயத்தில் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை தைப்பூச தினத்தன்று முதன் முறையாக மாலை உற்சவமாக மஞ்சத் திருவிழா நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 5.30 மணியளவில் மூலமூர்த்தி முருகப்பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பூஜைகள் இடம்பெற்று தொடர்ந்து 6.30 மணியளவில் விஷேட வசந்த மண்டப தீப ஆராதனைகள் ஆலய பிரதம சிவாச்சாரியார் தாணு வாசுதேவ ஜெயவஸ்தாங்க குருக்கள் தலைமையில் இடம்பெறும்.

தொடர்ந்து எம்பெருமான் முத்துக்குமாரசுவாமி வள்ளி - தெய்வயானை சமேதராக உள்வீதி வலம் வந்து 7 மணியளவில் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய மஞ்ச இரதத்திலே வெளி வீதியுலா வலம் வருவார்.

தைப்பூச மஞ்சத் திருவிழாவின் விசேட சிறப்பம்சமாக ஆலய தவில் நாதஸ்வர வித்துவான்களான தாவடியூர் கணேசமூர்த்தி பவித்திரன் குழுவினருடன் இணைந்து உலகப் புகழ் பெற்ற நாதஸ்வர சக்கரவர்த்தி ஈழ நல்லூர் பாலமுருகன் குழுவினரின் தவில் நாதஸ்வர இசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது. (ச)

# மஞ்சத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஜன.22
வரலாற்றுப் பிரசித்திபெற்ற இணுவில் கந்தசுவாமி ஆலய தைப்பூச மஞ்சத்திருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு பாற்குடப் பவனி இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி, இணுவில் கந்த சுவாமி ஆலயத்தைச் சென்றடையும். தொடர்ந்து காலை 9 மணிக்கு வருடாந்தப் பொங்கல் இடம்பெறும். மாலை 6 மணிக்கு வசந்தமண்டபப் பூசைவழிபாடு களைத் தொடர்ந்து ஆறுமுகப்பெருமான் உலகப் பெருமஞ்சத்தில் வீதி உலா வரும் திருக்காட்சி இடம்பெறும். இதன்போது தமிழரின் பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும். (க-66)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**இடபம்:** உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள். சகோதரர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்வது நல்லது. சிலருக்குத் திடீர் பணவரவுடன் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** இன்று குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பாதிப்பு இருக்காது. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். தாய்வழியில் திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**கடகம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. திடீர்ச்செலவுகளும் ஏற்படக்கூடும். தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்க அதிகாரிகளால் ஆதாயம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**கன்னி:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர் அல்லது நண்பர்கள்மூலம் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை ஏற்படும்.

**துலாம்:** மனதில் வீண் குழப்பங்கள் தோன்றி மறையும். ஆனாலும், புதிய முயற்சி சாதகமாக முடியும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். தன்னம்பிக்கையுடனும் தைரியத்துடனும் செயற்படுவீர்கள். துணிச்சலாக முடிவெடுக்கும் திறன் கூடும்.

**தனுசு:** தொடங்கும் காரியங்கள் இழுபறியாகி முடியும். தேவையான பணம் இருந்தாலும், எதிர்பாராத செலவுகளால் மனச்சஞ்சலம் உண்டாகும்.

**மகரம்:** உற்சாகமான நாள். கணவன்–மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் ஏற்படும்.

**கும்பம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன், சிலர் கடன் வாங்கவும் கூடும்.

**மீனம்:** வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே சிறுசிறு வாக்குவாதம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் சிப்பாயொருவரின் வீட்டில் கைக்குண்டுகள் மீட்பு

அநுராதபுரம், ஜன.22

அநுராதபுரம், மாத்தளை சந்திப் பகுதியில் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரின் வீட்டில் இருந்து மூன்று கைக்குண்டுகள் கைப் பற்றப்பட்டுள்ளன என்று அநுராதபுரம் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அநுராதபுரம் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்தக் கைக் குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதனையடுத்து, குறித்த முன் னாள் சிப்பாய் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டுள்ளார். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை அநுரா தபுரம் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின் றனர். (ச-இ)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
### ஆதனப் பெயர் மாற்றமும் ஆதன உபபிரிவிடலும்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 06, நுணாவில் கல்வயல் வீதி, ஆதன இலக்கம் 125 (பழைய இலக்கம் 125) எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை என்னும் பெயரில் ஆதனவரிப் பெயரேட்டில் பதியப்பட்டுள்ளது. தற்போது நுணாவில் கல்வயல் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த திரவியலிங்கம் இந்துஜன் பெண் அஜித்தா இவ்வாதனத்தை தமது பெயரிற்கு, எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்காக ஆதன உபபிரிவிடலுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்திற்கு சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த விநாசித்தம்பி பொன்னம்பலம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு V.P.கார்த்திகேசு அவர்கள் முகதாவில் 15669 இலக்க 11.07.1992 ஆம் திகதியில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் இவ் ஆதனத்தை கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியத்திற்கு வழங்கியுள்ளார்.

பின்னர் கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியமும் பெண் இராசேஸ்வரியும் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு V.P.கார்த்திகேசு அவர்கள் முகதாவில் 16937 இலக்க 05.12.1994 ஆம் திகதியில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் இவ் ஆதனத்தை அவ்வூர் விநாசித்தம்பி பொன்னம்பலத்திற்கு வழங்கியுள்ளனர்.

பின்னர் கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த விநாசித்தம்பி பொன்னம்பலம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு S.P.மயில்வாகனன் அவர்கள் முகதாவில் 9143 இலக்க 08.04.1995 ஆம் திகதியில் நிறைவேற்றிய பொருத்த உறுதி மூலம் இவ் ஆதனத்தை மட்டுவில் தெற்கைச் சேர்ந்த முருகேசு துரைசிங்கம் மகள் பத்மாஜனிக்கு வழங்கியுள்ளார்.

பின்னர் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த முருகேசு துரைசிங்கம் மகள் பத்மாஜனியும் கல்வயல் சாவகச்சேரி விநாசித்தம்பி பொன்னம்பலம் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு செ.கணபதிப்பிள்ளை அவர்கள் முகதாவில் 554 இலக்க 19.01.2000 ஆம் திகதியில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் இவ் ஆதனத்தை பெருங்குளம் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தசாமி பெண் யோகேஸ்வரிக்கு வழங்கியுள்ளனர்.

பின்னர் நுணாவில் கல்வயல் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தசாமியும் பெண் யோயேஸ்வரியும் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு செ.கணபதிப்பிள்ளை அவர்கள் முகதாவில் 3521 இலக்க 06.02.2016 ஆம் திகதியில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் இவ் ஆதனத்தை கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த சிவலிங்கம் கருணைராஜாவும் பெண் மனோன்மணியும் ஆகியோருக்கு வழங்கியுள்ளனர்.

பின்னர் கல்வயல், சாவகச்சேரியைச் சேர்ந்த சிவலிங்கம் கருணைராஜாவும் பெண் மனோன்மணி ஆகியோர், சாவகச்சேரி பிரசித்த நொத்தாரிசு ச.குகப்பிரியா அவர்கள் முகதாவில் 197 இலக்க 15.06.2023 ஆம் திகதியில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் இவ் ஆதனத்தை மட்டுவில் வடக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த திரவியலிங்கம் இந்துஜன் பெண் அஜித்தா ஆகியோருக்கு வழங்கியுள்ளனர்.

#### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி இறை தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவு சாவகச்சேரி நகரசபை, கிராமசேவையாளர் பிரிவு ஜே/305 "காட்டு வளவு" நிலப்பரப்பு 3 இவ்வாதனத்தை நில அளவையாளர் மீசாலை வல்லிபுரம் சிவராசா அவர்களால் 2016 ஆம் ஆண்டு தை மாதம் 30 ஆந் திகதியன்று அளந்து வரையப்பட்ட 4867 ஆம் இலக்க அளவைப்படத்தில் நிலக்கூறு இலக்கம் 1 எனக் காட்டியுள்ளார். அதன் படி நிலப்பரப்பு 3 குழி 00.44 இவ்வாதனம் 2023ம் ஆண்டு வைகாசி மாதம் 10ம் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் R.இராஜகோபாலு அளந்து வரைந்த 1237 இலக்க வரைபடத்தின் படி 2 துண்டுகளாக காட்டப்பட்ட நிலப்பரப்பு 2 குளி 16.54 இதில் 1ம் இலக்கத்துண்டு நிலப்பரப்பு 1 குளி 09.00 நிலப்பரப்பு ஒன்று குளி பூச்சியம் ஒன்பது தசம் பூச்சியம் பூச்சியம் இதற்கெல்லை

கிழக்கு : குறித்த 8907 இலக்க படத்தின் 2ம் துண்டு ஆதனம்
வடக்கு : அறுதி விற்பவருக்குரிய ஆதனம்
மேற்கு : ஒழுங்கை
தெற்கு : முருகையா பெண் ஜெயந்தியின் ஆதனம்

இவ்வெல்லைக் காணியடங்கலும், அதைச் சேர்ந்தவைகள் அனைத்தும்.

இவ்வாதன பெயர் மாற்றம், ஆதன உபபிரிவிடல் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ அல்லது தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளராக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**நகராட்சி மன்றம்**
**சாவகச்சேரி**



# முன்பள்ளி வளாகத்துக்கு மதில் அமைக்க உதவி!

யாழ்ப்பாணம், ஜன.22

பருத்தித்துறை கற்கோவளம் புனிதநகர் புரட்சி முன்பள்ளி வளாகத்துக்கு முன் மதில் அமைப்பதற்காக மக்கள் நலன்புரிச் சங்கம் பொற்பதி நிர்வாகத்தினரால் 25 சிமெந்து பைக்கற்றுகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன. முன்பள்ளியின் கோரிக்கைக்கமைவாக குறித்த உதவி வழங்கப்பட்டதுடன் கட்டுமானப்பணியும் ஆரம்பித்துவைக்கப்பட்டது. நிகழ்வில் ஜனநாயகப்போராளிகள் கட்சித் தலைவர் வேந்தன், நலன்புரிச்சங்க இயக்குநர் சந்துரு, சங்கத்தின் தலைவர் சிறீ, பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் சுரேஷ் குமார், இளைஞர் அணி பெண்கள் செயற்பாட்டாளர் பிரதீபா, முன்பள்ளி ஆசிரியர்கள் உள்ளிட்ட நிர்வாக உறுப்பினர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-100)


# இலங்கைக்குக் கடத்தவிருந்த 116 கிலோ கஞ்சா சிக்கியது

சென்னை, ஜன.22

இலங்கைக்குக் கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந் 116 கிலோ கஞ்சா தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்டத்தில் மீட்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி அருகே கடல் வழியாக இலங்கைக்குக் கஞ்சா கடத்தப்படவுள்ளது என்று சுங்கத்துறையினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் அதிகாலை தோப்புவலசைக் கடற்கரைப் பகுதியில் வாகனம் ஒன்றில் வந்தவர்கள் பொதிகளை இறக்குகின்றனர் என்று கிடைத்த தகவலை அடுத்து, அங்கு சென்ற சுங்கத்துறை அதிகாரிகள் தேடுதல் மேற்கொண்டனர். இந்தத் தேடுதல் நடவடிக்கையில் இலங்கைக்குக் கடத்துவதற்காக ஆங்காங்கே மறைத்துவைக்கப்பட்டிருந்த கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்ற கஞ்சாவின் இலங்கைப் பெறுமதி சுமார் 3 கோடி ரூபா என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-27)




## யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)
### கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தை பண்டிகைக் காலங்களில் வாடகைக்கு வழங்குவதற்கான கூறுவிலை கோரல்-2026

2026ம் ஆண்டின் பண்டிகைக் காலங்களில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் விற்பனை நடவடிக்கையினை மேம்படுத்த விரும்பும் வர்த்தகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

சபையில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தை அலுவலக நேரத்தில் ரூபா 100.00 செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தினை தபால் உறையில் இட்டு பதிவுத் தபாலில் "கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தினை பண்டிகைக் காலங்களில் வாடகைக்கு வழங்குவதற்கான கூறுவிலை" எனக்குறிப்பிட்டு 11.02.2026 இற்கு முன்னதாக கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**செயலாளர்**

**கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப**
**2வது மாடி யாழ்ப்பாணம்**
**மாவட்டக் கூட்டுறவுச்சபை**
**இல.12, கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CR 46930) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நிலங்களைத் தாருங்கள் நாங்கள் உழைத்து உண்போம்

## ரவிகரன் எம்.பி. நாடாளுமன்றில் 'பளார்'



**கொழும்பு, ஜன. 22**

**அரசாங்கம் ஒருபுறம் தமிழ் மக்களின் நிலங்களை அபகரித்து வறுமையை உண்டாக்கிவிட்டு, மறுபுறம் 'அஸ்வெசும' என்ற பெயரில் நலன்புரித் திட்டங்களை முன்னெடுப்பது வேடிக்கையானது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நடைபெற்ற 'அஸ்வெசும' நலன்புரிக் கொடுப்பனவு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
மக்களின் வாழ்வாதாரக் காணிகளை இராணுவம் மற்றும் வனவளத் திணைக்களம் கையகப்படுத்தியுள்ளன. கடலில் இந்திய இழுவைப்படகுகளின் ஆதிக்கம் மற்றும் சட்டவிரோத மீன்பிடியால் மீனவர்களின் வாழ்வாதாரம் சிதைக்கப்பட்டுள்ளது. இவை மக்களை வறுமைக்குள் தள்ளியுள்ளன.

வவுனியா வடக்கு வலயத்தில் 23 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. ஆசிரியர் பற்றாக்குறையினால் மாணவர்களின் கல்வி அடைவு பாதிக்கப்பட்டு, அது சமூக வறுமைக்கு வழிவகுக்கின்றது.

சொந்த நிலங்களை இழந்த கேப்பாப்பிலவு மற்றும் முள்ளிக்குளம் மக்கள், அஸ்வெசும சுட்டிகளின்படி வறியவர்களாகக் கருதப்படுகிறார்களா? அல்லது வறுமையற்றவர்களாக கருதப்படுகிறார்களா? நாங்கள் உழைப்பாளிகள், எங்களுக்கு உணவை வழங்குவதைவிட, எமது பயிர் நிலங்களையும் குடியிருப்புக் காணிகளையும் விடுவியுங்கள். சிறையிலுள்ள கைதிகளையும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளையும் விடுவித்து குடும்பங்களை ஆற்றுப்படுத்துங்கள். அதுவே உண்மையான ஆறுதல் திட்டமாகும் - என்றார். (ச-246)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 . 12 . 1936 | 20 . 01 . 2026 |



## திருமதி பத்மதேவி பாலசிங்கம்

மியான்மார் (பர்மா) பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கு றொட்டியாலடி தோம்பை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மதேவி பாலசிங்கம் கடந்த 20.01.2026 செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை சுப்பிரமணியம்- பொன்னுப்பிள்ளையின் அன்பு புதல்வியும் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் பாலசிங்கம் (ஓய்வுபெற்ற சிரேஸ்ட முகாமையாளர்- இலங்கை வங்கி) அன்பு மனைவியும் வனஜா (அவுஸ்திரேலியா), சுகுணா (தேசிய சேமிப்பு வங்கி - யாழ்.கிளை) அன்புத் தாயாரும் ராகவன் (அவுஸ்திரேலியா), விக்னவேல் (பிரதேச செயலகம்- யாழ்ப்பாணம்) அன்பு மாமியாரும் ஜசோதன், நிந்துஷன் (யாழ். இந்துக் கல்லூரி), மதுரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேத்தியும் நடேசன் (இங்கிலாந்து), காலஞ்சென்றவர்களான பரமநாதன் (பரம்), பத்மநாதன் (கதிர்), பாலநாதன் (பாலன்), கமலாதேவி (மீனா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவசுப்பிரமணியம் (இங்கிலாந்து), இராசமணி (நோர்வே), காலஞ்சென்றவர்களான தங்கமுத்து, செல்லமுத்து, பாக்கியஇலட்சுமி, சின்னத்தங்கம், முருகையா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியை (20.01.2026) தோம்பை வீதி உடுவில் கிழக்கில் அன்னாரில் இல்லத்தில் நடைபெற்று மருதனார்மடம் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மூ.பாலசிங்கம்**
**021 224 0497**
**077 6703659**
**074 1570876**

**தோம்பை வீதி,**
**உடுவில் கிழக்கு,**
**சுன்னாகம்**

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31 . 12 . 1949 | 20 . 01 . 2026 |



## கந்தையா கருணாகரன் (சந்திரகாசன்)

வரியப்புலம் சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கு சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கருணாகரன் (சந்திரகாசன்) அவர்கள் 20.01.2026 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தேவராணியின் பாசமிகு கணவரும், மயூரன் (UK), நிருபா (UK), மயூரப்பிரியா (UK), நிறோஜன் (Swiss), புருசோத்மன் (Swiss), துவாரகன் (France) ஆகியோரின் அன்புத் தந்தையும், கார்த்திகா, அகிலன், விஷ்ணுவரன், ஆஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், அஷ்வினி, ஓவியா, றியானா, ஜஸ்வின், ஜஸ்மீரா, ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேரனும், ராதாம்பிகை (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான ஞானாம்பிகை, இரத்தினாம்பிகை, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, நவரட்ணராஜா, ஆறுமுகம் மற்றும் தேவராசா, கதிர்காமநாதன் (கிளி), புஷ்பராணி, அருந்ததி, கலாமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.01.2026 வியாழக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு**
**077 196 5672, 077 325 7379**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 469321 E)

# மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05 . 01 . 1927 | 21 . 01 . 2026 |



## முத்துத்தம்பி ஒப்பிலாமணி

(ஓய்வுநிலை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் - உள்ளூராட்சி திணைக்களம், பகுதிநேர ஆங்கில ஆசிரியர் )

இடைக்காடு அச்சுவேலியினை பிறப்பிடமாகவும் உசன் மிருசுவிலை வதிவிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி ஒப்பிலாமணி அவர்கள் 21.01.2026 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி- சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இந்திராணி, குருநாதபிள்ளை, செங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயலட்சுமி (கனடா), விஜயகுமார் (சுவிஸ்), விஜயராணி (கனடா), விஜயரத்தினம் (ஓய்வுநிலை ஆசிரியர்- யா/ நெல்லியடி மத்திய கல்லூரி, யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி), விஜயகுமாரி (கனடா), விஜயதாசன் (ஆசிரியர்-யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), விஜயகுலன் (கனடா), விஜயரூபன் (கனடா), விஜயபூசணி (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் மற்றும் இராமஜெயம் (கனடா), செல்வராணி (சுவிஸ்), காலஞ்சென்ற இளையதம்பி (NSB வங்கி உத்தியோகத்தர்), ராகினி (ஆசிரியர்- யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), புஸ்பராஜா (கனடா), சோதிலட்சுமி (பிரதி விவசாயப் பணிப்பாளர், கிளிநொச்சி), சாந்தினி (கனடா), கலாவதனி (கனடா) ஆகியோரின் மாமனாரும் மற்றும் கோபிகா- மதன் (கனடா), பிருந்தன் (கனடா), விதுஷன்- சய்ரா (சுவிஸ்), காலஞ்சென்ற நிருஷன் (சுவிஸ்), வர்ஷா (கனடா), கௌதமி (ஆசிரியை- கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி)- ரகுராம் (நிலத்தோற்ற வடிவமைப்பாளர்- வவுனியா பல்கலைக்கழகம்), அபிராம் (விஞ்ஞானபீட மாணவன், யாழ். பல்கலைக்கழகம்), அனுஷன்- மதுவந்தி (அவுஸ்திரேலியா), மதுஷா (கனடா), மதனிகா (மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், கொழும்பு)- மதுரங்கன் (அவசர சிகிச்சை அதிகாரி, கொழும்பு), மிதுஷன் (கனடா), மைத்திரேயி (கனடா), சஜினி, அபிஷன் (கனடா) ஆகியோரின் அன்புப்பேரன் மற்றும் றியான், றிஷான், மிலான், அதிகன், அதிதன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (25.01.2026) 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**'விஜயவாசம்'**
**உசன், மிருசுவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**(077 6125148, 077 6176868)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 கிலோ ஐஸுடன் சந்தேகநபர் கைது!

நிட்டம்புவ பிரதேசத்தில் 60 கிலோகிராமுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருளுடன் நபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.
ஐஸ் போதைப்பொருளை முச்சக்கரவண்டி ஒன்றில் கடத்திச் சென்றுகொண்டிருந்தபோதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதன் பெறுமதி 90 கோடி ரூபாவுக்கும் அதிகம் எனப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.
குறித்த சந்தேகநபர், தற்போது வெளிநாட்டில் உள்ள திட்டமிடப்பட்ட குற்றவாளிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களான 'டுபாய் வருண', 'மொஹமட் சித்திக்' மற்றும் தற்போது சிறையிலுள்ள திலிந்து சஞ்சீவ அல்லது 'லேனா' ஆகியோரின் நெருங்கிய சகா என்பது விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# முட்டை விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன.22
சந்தையில் முட்டையின் விலை வேகமாக வீழ்ச்சியடைந்துவருகின்றது.
முட்டையொன்று 30 ரூபா வரையில் வீழ்ச்சியடைந்துள்ளது என்று அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது. முட்டை உற்பத்தி அதிகரித்துள்ளதே இந்த விலை வீழ்ச்சிக்குக் காரணம் என சங்கத்தின் செயலாளர் அனுரசிரி மாரசிங்க தெரிவித்துள்ளார். (ச)



# மின்சாரவேலியில் சிக்கி யானை உயிரிழப்பு

## கிளிநொச்சியில் சோகம்

கிளிநொச்சி, ஜன.22
கிளிநொச்சி கல்மடுக்குளத்தின்கீழ் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நெத்தலியாறுப் பகுதியில் யானை ஒன்று உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டு ளது. பயிர்களைக் காட்டு யானைகளிடம் இருந்து பாதுகாப்பதற்காகச் சில விளைநிலங்களைச் சுற்றிச் சட்டவிரோதமான முறையில் மின்சாரவேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு அமைக்கப்பட்ட மின்சாரவேலியில் சிக்கியே இந்த யானை உயிரிழந்திருக்கலாம் என முதற்கட்ட விசாரணைகளில் சந்தேகிக்கப்படுகிறது. சம்பவ இடத்துக்கு விரைந்த வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ச-113)

# பெரும்போக அறுவடை ஆரம்பம்; நெற்கொள்வனவைத் துரிதப்படுத்துக

## ரவிகரன் எம்.பி வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 22
வன்னிப்பிராந்தியம் உட்பட வடக்கு - கிழக்கின் ஏனைய பாகங்களிலும் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில், நெல் சந்தைப்படுத்தல் சபையினூடாக விவசாயிகளிடமிருந்து நெற்கொள்வனவு மேற்கொள்ளும் செயற்பாட்டை விரைந்து முன்னெடுக்குமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக விவசாயிகளிடம் நெற்கொள்வனவை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். குறிப்பாக முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உள்ளிட்ட வன்னிப் பிராந்தியத்தி லும் வடக்கு, கிழக்கின் ஏனைய பாகங்களிலும் 2025 - 2026 ஆம் ஆண்டுகளுக்குரிய பெரும்போக நெற்செய்கையின் அறுவடை தொடங்கியுள்ளது. அரசினால் உரிய காலத்தில் நெல்லுக்கான நிர்ணய விலை அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை உரிய காலத்தில் நெல்சந்தைப்படுத்தல் சபையினூடாக விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும்.
நெற்கொள்வனவில் தாமதம் ஏற்பட்டால் விவசாயிகள் தனியார் நெல் கொள்வனவாளர்களிடமும், இடைத்தரகர்களிடமும் நெல்லினை குறைந்த விலைக்கு வழங்கி நட்டமடையும் நிலை ஏற்படும்- என்றார். (ச-246)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கீழ்வரும் நிரந்தர பதவிகளிற்கு விண்ணப்பங்கள், பொருத்தமான இலங்கை பிரஜைகளிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்ப இறுதித் திகதி 13 மாசி, 2026.

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர், தரம் II "பிரிவு B" (பயிலுநர்)
2. தொழில்நுட்ப உத்தியோகத்தர், (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) தரம் III
3. முகாமைத்துவ உதவியாளர், தரம் III
4. ஆய்வுகூட உதவியாளர், தரம் III
5. நூலகக் கவனிப்பாளர், தரம் III
6. பாதுகாப்பு சேவகர், தரம் III
7. வேலைகள் உதவியாளர், தரம் III

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின், யாழ்ப்பாணப் பிரதான வளாகம் மற்றும் கிளிநொச்சி வளாகத்தில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பதாரவுகள் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

01. தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் II "பிரிவு B" (பயிலுநர்) - யாழ்ப்பாண மற்றும் கிளிநொச்சி வளாகங்கள்.

தகைமைகள்:

(i) க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சையில் இரண்டு (02) அமர்வுகளுக்கு மேற்படாமல், 5 திறமைச் சித்திகள் (Credits) உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்திறமைச் சித்திகளில் விஞ்ஞானம் மற்றும் கணிதம் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

மற்றும்

(ii) க.பொ.த (உயர் தர)ப் பரீட்சையில் விஞ்ஞானப் பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தெரிவு முறை: எழுத்துப்பரீட்சை மற்றும்/அல்லது செய்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் தெரிவு செய்யப்படும்.

வயது: விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்: U-MT1(III) ரூபா.51,095 – 7x540:10x640 – 60,575 p.m

02. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் -ICT) தரம் III - யாழ்ப்பாண மற்றும் கிளிநொச்சி வளாகங்கள்.

தகைமைகள்:

(i) க.பொ.த (உயர்தர)ப் பரீட்சையில் எத்துறையிலாவது ஒரே அமர்வில் மூன்று (3) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

(ii) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (Tertiary and Vocational Education Commission) ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட, தகவல் தொடர்பாடல் மற்றும் பல்லூடக தொழில்நுட்பம் / தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) / தகவல் தொழில்நுட்பம் அல்லது அதற்குச் சமனான துறையில் N.V.Q மட்டம் 5 இற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

- ICT துறையில் தொழில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தெரிவு முறை: எழுத்துப்பரீட்சை மற்றும்/ அல்லது செய்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வு.

வயது: விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்: U-MT1(III) &gh.51,095 – 7x540:10x640 – 60,575 p.m

03. முகாமைத்துவ உதவியாளர், தரம் III – யாழ்ப்பாண மற்றும் கிளிநொச்சி வளாகங்கள்.

தகைமைகள்:

(i) க.பொ.த. (சா/த) பரீட்சையில் கீழ் வரும் மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் (Credits) ஆகக் குறைந்தது ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

a. தமிழ் மொழி / சிங்கள மொழி
b. ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியம்
c. கணிதம்

மற்றும்

(ii) க.பொ.த. (உ/த) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் (பொதுப் பரீட்சை தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iii) மேலதிகமாக கீழ்வரும் தகைமைகளிருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்

(a) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட 06 மாதங்களிற்குக் குறையாத கணினிப் பிரயோகத் தகைமைச் சான்றிதழ்

மற்றும்

(b) இரண்டு வருட கால கணினிப்பிரயோகப் பயன்பாட்டிலான அனுபவம்

தெரிவு முறை: எழுத்துப் பரீட்சையும் நேர்முகத் தேர்வும்.

வயது: விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்: U-MN1(III) ரூபா.49,475 – 17x540 – 58,655 p.m

04. ஆய்வுகூட உதவியாளர், தரம் III – யாழ்ப்பாண மற்றும் கிளிநொச்சி வளாகங்கள்.

தகைமைகள்:

(i) க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு திறமைச் சித்திகளுடன் (Credits) ஆகக் குறைந்தது ஆறு பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது சித்தியடைந்திருத்தலுடன் ஆய்வுகூடத்தில் பயன்படுத்தப்படும் தரமான இரசாயன உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட நுட்பங்களை கையாளும் முறைகளைக் கொண்ட துறையிலான தேசிய தொழில்சார் தகைமைச் சான்றிதழ் 2 அல்லது 3 கற்கைநெறியினை (NVQ Level 2 அல்லது 3) மூன்றாம் நிலை அல்லது தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்சார் பயிற்சி நிறுவனத்தில் சட்டத்திற்கமைய நிறுவப்பட்ட சட்டரீதியான நிறுவனம் ஒன்றில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆகக் குறைந்தது ஆறு பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது சித்தியடைந்திருத்தலுடன் ஆகக் குறைந்தது ஒரு வருட கால ஆய்வுகூட சேவை அனுபவமும் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யும் முறை : தொழில் சார் பரீட்சையும் நேர்முகத்தேர்வும்.

வயது : விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 45 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் : U-PL2(III) - ரூபா. 44,575-16X490-52,415 p.m

05. நூலக கவனிப்பாளர் தரம் III - யாழ்ப்பாண மற்றும் கிளிநொச்சி வளாகங்கள்.
06. பாதுகாப்பு சேவகர் தரம் III - யாழ்ப்பாணம்
07. அலுவலக உதவியாளர் தரம் III - யாழ்ப்பாண மற்றும் கிளிநொச்சி வளாகங்கள்.

தகைமைகள் (மேற்குறிப்பிட்ட நூலக கவனிப்பாளர், பாதுகாப்பு சேவகர், அலுவலக உதவியாளர் பதவிகளுக்கானது):

க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு திறமை சித்திகளுடன் (Credit), ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது சித்தியடைந்திருத்தல்

தெரிவு செய்யும் முறை : தொழில் சார் பரீட்சையும் நேர்முகத்தேர்வும்.

வயது : விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 45 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் : U-PL1(III) - ரூபா. 42,775-16X450-49,975 p.m.

பாதுகாப்பு சேவகர் தரம் III பதவிக்கு மாத்திரம் மேலதிகமாக பின்வரும் தகுதிகள் காணப்பட வேண்டும்.

மார்பு சுற்றளவு: 32 அங்குலத்துக்கு குறையாது (ஆண்களுக்கு மாத்திரம்)

உயரம்: 5 அடி 4 அங்குலத்துக்கு குறையாது

- விளையாட்டு மற்றும் சமூகசேவைகளில் ஈடுபட்டமைக்கான ஆவணங்களை நிரூபிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**பதவிகளுக்கான பொதுவான நிபந்தனைகள்**

- இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும்.
- கடமைகளை சிறப்பாக நிறைவேற்ற உடல், உளரீதியாக தகுதி பெற்றிருக்க வேண்டும் மற்றும் இலங்கைத் தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்றத் தயாராக இருக்க வேண்டும்.
- சிறந்த நற்பண்புள்ளவராக ஒழுக்கமுள்ளவராக இருக்க வேண்டும்

**சட்டவழி நன்மைகள்:**

- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.
- பல்கலைக்கழக ஓய்வூதியத் திட்டத்தில் உறுப்பினராதல் , பல்கலைக்கழக சேமலாப வைப்பு நிதி, பணிக்கொடை கொடுப்பனவுகள், ஊழியர் நம்பிக்கை நிதிய அனுகூலங்கள்
- இலவச மருத்துவ சேவைகள்.

**விண்ணப்பச் செயன்முறை**

(i) விண்ணப்பிக்கும் முறை

- www.jobs.jfn.ac.lk என்ற இணையத்தளத்தின் மூலம் விண்ணப்பித்துக் கிடைக்கும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்களும் மேலதிக தகவல்களும் அவ் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- விண்ணப்ப இறுதி திகதி 13 மாசி, 2026.
- விண்ணப்பதாரர்கள் அனைத்து தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகள் நிகழ்நிலை முறைமையின் மூலமே பதிவேற்ற வேண்டும்.
- கல்வி/தொழில் சார் தகுதிகள் மற்றும் அனுபவம் சம்பந்தமான ஆவணங்கள் விண்ணப்ப இறுதி திகதிக்கு முன்னதாக (செல்லுபடித் திகதி) இருப்பவை மட்டுமே கவனத்தில் கொள்ளப்படும். கல்வி/ தொழில்முறை மற்றும் அனுபவ சான்றிதழ்களின் பிரதிகள் பதிவேற்றாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- பல்கலைக்கழகங்கள், அரச திணைக்களங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் நியதிச்சபைகளில் இருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களும் மேற்குறிப்பிட்ட இணையத்தளத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பித்து குறிப்பிட்ட விண்ணப்பப்படிவத்தினை பதிவிறக்கம் செய்து நிறுவனத்தலைவரின் சிபாரிசுடன்

**பிரதிப்பதிவாளர்,**
**கல்விசாரா தாபனக்கிளை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**தபாற்பெட்டி இலக்கம் 57**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்**

என்ற முகவரிக்கு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும்.

- தெளிவற்ற, முழுமையற்ற விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். தகுதியான விண்ணப்பதாரர்கள் மட்டுமே மின்னஞ்சல் மூலம் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள், மேலும் விபரங்கள் www.jobs.jfn.ac.lk இல் வெளியிடப்படும்.

**(ii) விண்ணப்பக் கட்டணம் மற்றும் பணம் செலுத்தும் முறை**

- ஒவ்வொரு விண்ணப்பத்திற்குமான விண்ணப்பக் கட்டணம் ரூபா. 1000.00.
- கட்டண முறை

**அ) நேரடியாக வங்கியில் பணம் செலுத்துதல் :**

விண்ணப்பக் கட்டணத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இல: 970 0000 9000 0387 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (ஆட்சேர்ப்பு) என்ற பெயரில் மக்கள் வங்கியின் எந்தக் கிளையிலும் செலுத்தலாம் . விண்ணப்பக் கட்டணம் செலுத்தியதற்கான வைப்புச் சீட்டை விண்ணப்பிக்கும் போது விண்ணப்பத்துடன் பதிவேற்ற வேண்டும்.

அல்லது

**ஆ) நிகழ் நிலை வங்கி கட்டணம் :**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்கு இலக்கம் 16210031000891 என்ற மக்கள் வங்கிக்கு (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளை/ கிளை குறியீடு: 162) அடையாள எண்ணையும்- 970 0000 9000 0387 சரியாக உள்ளிட்டு பணம் செலுத்த வேண்டும். நிகழ்நிலை வங்கி கட்டண பற்றுச்சீட்டின் படிமப் பிரதி விண்ணப்பத்துடன் பதிவேற்றப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தவும்.

- விண்ணப்பம் தொடர்பாக ஏதேனும் விளக்கம் தேவைப்பட்டால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதிப்பதிவாளர் கல்விசாரா தாபனக்கிளை அவர்களை அலுவலக நேரங்களில் தொலைபேசி இலக்கம் : 0212228566 இன் மூலமும் jobs@univ.jfn.ac.lk என்னும் மின்னஞ்சல் முகவரி மூலமும் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
21.01.2026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசக விழாவும் பொங்கல் நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஜன. 22
இந்து சமய அலுவல்கள் திணைக்களமும் நல்லூர் சங்கிலியன் மன்றம் இணைந்து நடத்தும் திருவாசக விழாவும் பொங்கல் நிகழ்வும் நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளன.
சங்கிலியன் மன்றத்தில், நிலையத் தலைவர் வி.ஜனகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய.அநுருத்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.
சிறப்பு விருந்தினராக சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவர் எஸ்.சத்தியேந்திரன், கௌரவ விருந்தினர்களாக சி.தர்மகுலசிங்கம், தொழிலதிபர் க.செந்தூரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ம)

## மந்தைவெளி முதியவர் கொலை; குற்றவாளிகள் இருவருக்கு தூக்கு



யாழ்ப்பாணம், ஜன.22
கொடிகாமம், மந்தைவெளியில் 2010ஆம் ஆண்டு நடந்த கொலைச் சம்பவத்தில் குற்றவாளிகள் இருவருக்கு தூக்குத்தண்டனை விதித்து யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி டி.எஸ். சூசைதாஸ் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தார்.
2010ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16ஆம் திகதி மந்தைவெளியில் 60 வயதான முதியவர் ஒருவர் கோடரி மற்றும் பொல்லால் தாக்கப்பட்டு மிகக்கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டார். இது தொடர்பான வழக்கு விசாரணை யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்தது. வழக்கில் எதிரிகள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா முன்னிலையானார். வழக்குத் தொடுநர் சார்பில் சட்டமா திணைக்களத்தின் சார்பில் அரச சட்டத்தரணி கா.நசிகேதன் முன்னிலையாகி வழக்கை நெறிப்படுத்தினார். சம்பவம் தொடர்பான சாட்சியங்கள் மற்றும் ஆதாரங்களை ஆராய்ந்த நீதிபதி எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் வழக்குத் தொடுநர் நிரூபித்துள்ளார் என்று தெரிவித்தார். மந்தைவெளியைச் சேர்ந்த எதிரிகள் இருவரையும் குற்றவாளிகளாக இனங்கண்ட நீதிபதி அவர்களுக்குத் தூக்குத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். ஜனாதிபதியால் தீர்மானிக்கப்படும் திகதியில், நிர்ணயிக்கப்படும் இடத்தில் குற்றவாளிகளின் உயிர் பிரியும்வரை தூக்கிலிடவேண்டும் என்று இந்த மன்று பரிந்துரைக்கிறது எனவும் நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். (எ-66)

### இரசாயனத்...

போர்ச்சூழல் காரணமாக 1985ஆம் ஆண்டு மூடப்பட்ட பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்காக, அரசாங்கத்தால் முதற்கட்டமாக 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. இதையடுத்தே கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்கும் நோக்குடன் நேற்று அடிக்கல் நடப்பட்டுள்ளது.
தொழிற்சாலையை இயங்கவைக்கத் தேவையான உட்கட்டுமானங்களை எதிர்வரும் 9 மாதங்களில் அமைப்பதே இந்தத் திட்டத்தின் தற்போதைய நோக்கமாகும். இதன்பின்னர், அடுத்த 30 மாதங்களில் 6.3 பில்லியன் ரூபா செலவில் தொழிற்சாலையை முழுவதுமாக இயங்க வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சு.முரளிதரன், கண்டாவளைப் பிரதேசசெயலாளர் த.பிருந்தாகரன், கரைச்சிப் பிரதேசசபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன், முதலீட்டுச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் தலைவர்கள், கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர், சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ-ம-55)

### இலங்கைக்...

ஏற்பாடுகள் மீண்டும் பலப்படுத்தப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் இரவு விசேட கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட கடற்படையால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டுள்ளது.
கைதான மீனவர்கள் அனைவரும் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். மேலதிக விசாரணைகளின் பின்னர், யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்களத்தின் ஊடாக அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இந்தக் கைது நடவடிக்கைக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்திய வெளிவிவகார அமைச்சகத்துக்கும், பிரதமர் அலுவலகத்துக்கும் அவர் கடிதம் அனுப்பியுள்ளார். இலங்கைக் கடற்படைக்கு எதிராக இந்தியா கடும் நடவ்டிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழக முதல்வர் வலியுறுத்தியுள்ளார். (அ-ம-26-20)

### யாழ்ப்பாணம்...

இந்தியாவிலும் நடைபெறவுள்ளன. பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி நெதர்லாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் கொழும்பில் நடைபெறும் ஆட்டத்துடன் உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பமாகின்றது. இவ்வாறான நிலையிலேயே தொடரை நடத்தும் நாடு என்ற அடிப்படையில், இலங்கையில் நேற்று உலகக்கிண்ணம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 24ஆம் திகதிவரை இந்த உலகக்கிண்ணம் இலங்கையில் பல்வேறு நகரங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளது. இதற்கமையவே யாழ்ப்பாணத்துக்கும் கிண்ணம் எடுத்துவரப்படும் என்று தெரியவருகின்றது. (அ-ம)

### அதிகாரத்தைப்...

பெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தற்போது பிரதேசசபைகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும், உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களைப் பறிப்பதற்காகவும், பிரஜாசக்தி என்ற நிகழ்ச்சி நிரலைக் கொண்டு வந்துள்ளனர். மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இருப்பினும் தமது கட்சிசார் நபர்களை நியமித்து அவர்கள் மூலம் உள்ளூராட்சி மன்றச் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் என்ற எண்ணப்பாடு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.
மக்களாகிய நீங்கள் யாரிடமும் மண்டியிடத் தேவையில்லை. நேரடியாகப் பிரதேச சபையை அணுகி உங்களது பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
வலிகாமம் வடக்குப் பிரதேசசபைக்கு உட்பட்ட நான்கு உப அலுவலகங்களுக்கும் ஒவ்வொரு நூலகங்கள் உள்ளன. ஏனைய மூன்று நூலகங்கள் அதற்குரிய இடங்களில் சிறப்பாக இயங்கினாலும் மயிலிட்டி நூல்நிலையமானது இன்றளவும் விடுவிக்கப்படாமல் காணப்படுகின்றது. எங்களுடைய மக்கள் கிட்டத்தட்ட 36 வருடங்களாகத் தமது சொந்த மண்ணில் வாழமுடியாத துர்ப்பாக்கிய நிலையிலுள்ளனர்.
எமது பிரதேசத்தில் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல வேண்டும், மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்கிற எதிர்பார்ப்பில் மக்கள் உள்ளனர். வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலைக்கு அருகாகச் செல்லும் வீதி விடுவிக்கப்பட்டாலும் குறித்த பாடசாலை இதுவரை விடுவிக்கப்படவில்லை. அரசாங்கத்தினால் சிறப்பாகச் செயற்பட வேண்டிய விடயங்கள் எவ்வளவோ உள்ளன. ஜனநாயக விரோதச் செயல்களுக்குப் பதிலாக, மக்களுக்குத் தேவையான விடயங்களைச் செயற்படுத்துமாறு நாங்கள் அறிவுறுத்துகின்றோம் - என்றார். (அ-ம-66)

### தமிழ்...

போராடின. தமிழர்களை இலக்கு வைத்தோ அல்லது தமிழர்களுக்கு எதிராகவோ நாங்கள் போராடவில்லை. எனவே, வடமாகாணத்துக்குச் சென்று இனவாதம் பேசுவதை ஜனாதிபதி அநுர நிறுத்திக்கொள்ள வேண்டும்.
புதிய கல்விக் கொள்கைக்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. போராட்டத்தில் ஈடுபடவில்லை. தவறுகளை திருத்திக்கொண்டு சிறந்த முறையில் சீர்திருத்தங்களை முன்வைக்குமாறே கோரினோம். ஆளுங்கட்சியில் படித்தவர்கள் இருப்பதாக குறிப்பிடப்படுகிறது. ஆகவே கல்விக் கொள்கையை சிறந்த முறையில் தயாரியுங்கள்.
திருகோணமலை புத்தர்சிலை விவகாரத்தில் பிக்குகள் உட்பட 9 பேரைக் கைது செய்து சிறையில் வைத்துள்ளனர். ஆனால், உண்மையில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.
அரசாங்கம் தமக்கு ஏற்றாற்போல் சட்டத்தை பயன்படுத்திக் கொள்கிறது. கடந்தகால ஊழல் மோசடிகள் குறித்து அவதானம் செலுத்துவதைப் போன்று 323 கொள்கலன்கள் விடுவிப்பு தொடர்பிலும் அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (அ-ம)

### வவுனியாவில்...

தொடர்பில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் விசேட எச்சரிக்கை விடுத்துள்ளது. அந்த அறிக்கையிலேயே வவுனியாவில் காற்றின் தரம் மோசமடைந்துள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
சிறுவர்கள், முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், ஆஸ்துமா அல்லது இதயம் தொடர்பான நோய்கள் உள்ளவர்கள் மிகவும் அவதானத்துடனும், பாதுகாப்புடனும் இருக்க வேண்டும் - என்றும் கூறப்பட்டுள்ளது. (அ-ம)

### அரசை...

கிடையில் பேரிடரும் ஏற்பட்டது. எனினும், சவாலை நாம் எதிர்கொண்டோம். பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நாட்டில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டபோது நாட்டுக்கு கிடைக்கப்பெற்ற உதவிகள் கொள்ளையடிக்கப்பட்டன. ஆனால் எமது ஆட்சியில் அவ்வாறு நடக்கவில்லை. மக்களுக்குரிய உதவித் திட்டங்கள் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ற எதிர்க்கட்சி இன்று நாட்டில் இல்லை. இதுவொரு அவலமான நிலை. நாட்டுக்காக இணைந்து செயற்பட வேண்டிய தருணங்களில்கூட பொறுப்பை மறந்து எதிரணிகள் அரசியல் நடத்தும் நிலைமை காணப்பட்டது. ஆயுதக் குழுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்போது சில எதிரணி அரசியற் தலைவர்களுக்கு நடுக்கம் ஏற்படுகின்றது. ஊழல், மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்போதும் அவர்கள் அச்சப்படுகின்றனர். இந்த எதிரணியால் அரசாங்கத்தை எதுவும்செய்ய இயலாது - என்றார். (அ-ம-44)

### அஸ்வெசும...

மன்றத்தின் நேற்றைய அமர்வில் அமைச்சர் உபாலி பன்னிலகே மேலும் தெரிவித்ததாவது:-
அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மாதாந்த உதவித்தொகைகள் அதிகரிக்கப்படவுள்ளன. இதன் மூலம் சுமார் 19 லட்சம் மக்கள் நேரடிப் பயன் பெறுவார்கள். இதன்படி, மிகவும் ஏழ்மையான பிரிவிலுள்ள மக்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் உதவித் தொகை 15 ஆயிரம் ரூபாவில் இருந்து 17 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.
குறைந்த வருமானம் கொண்ட பிரிவிலுள்ளவர்களுக்கான கொடுப்பனவு 8 ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து 10 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்படவுள்ளது. இடைநிலைப் பிரிவிலுள்ளவர்களுக்கு மாதத்துக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதுடன், அவர்களுக்கான நிவாரணக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது -என்றார். (அ-ச-இ)

### கசிப்பு...

தொடர்பில் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். இதன்போதே, கடந்த வருடம் கசிப்புக் காய்ச்சிய, விற்பனையில் ஈடுபட்ட 3 ஆயிரத்து 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைவிட, சாராயத்தை சட்டவிரோதமாக வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை தொடர்பில் 21 பேரும், போதை மாத்திரைகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் 19 பேரும் கைது செய்யப்பட்டு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (அ-ம-55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களின் முதுமைக்காலத்தை உறுதிப்படுத்த ஓய்வூதியத் திட்டம்!

**கொழும்பு, ஜன.22**

**இலங்கை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையுடன் இணைந்து மீனவர்களுக்காக அதிக நன்மைகளை வழங்கக்கூடிய புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.**

இந்த ஓய்வூதியத் திட்டம் மீனவர்களின் தற்போதைய பொருளாதார வசதிக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் தங்களின் விருப்பத்திற்கேற்ப வெவ்வேறு பங்களிப்புத் திட்டங்களைத் தெரிவுசெய்ய முடியும்.

இதன்மூலம் 60 வயது பூர்த்தியடைந்த பின்னர், அவர்கள் தெரிவு செய்த திட்டத்தின் அடிப்படையில் மாதாந்தம் ரூ. 5,000, ரூ. 10,000, ரூ. 15,000, ரூ. 20,000, ரூ. 25, 000 அல்லது அதற்கும் அதிகமான தொகையை ஓய்வூதியமாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்தப் புதிய திட்டத்தின்கீழ், 60 வயதுக்குப் பின்னர் ஒவ்வொரு குறிப்பிட்ட வயது எல்லையைத் தாண்டும் போதும் ஓய்வூதியத் தொகை அதிகரிக்கப்படும். உதாரணமாக, மாதாந்தம் ரூ. 1,000 ஓய்வூதியத்தைப் பெறும் அடிப்படைத் திட்டத்தில் ஒருவர் இணைந்திருந்தால் 64 முதல் 70 வயது வரை 1,250 ரூபாவும், 71 முதல் 77 வயது வரை 2,000 ரூபாவும், 78 வயதுக்கு மேல் 5,000 ரூபாவும் என்ற அடிப்படையில் கொடுப்பனவு உயரும்.

இந்தத் திட்டத்தில் இணைபவர்களுக்கு ஆயுள் காப்புறுதிச் சலுகைகள் வழங்கப்படும்.

ஓய்வூதியம் பெற்று வருபவர் உயிரிழக்க நேரிட்டால், அந்த ஓய்வூதியத் தொகை அவரது துணைவருக்குச் சென்றடையும்.

கடற்றொழில் மட்டுமன்றி, அது சார்ந்த ஏனைய உப தொழில்களில் ஈடுபடுபவர்களும் இந்தத் திட்டத்தின் கீழ் தங்களை இணைத்துக்கொள்ள முடியும். கடற்றொழிலாளர்களின் எதிர்கால வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த வேலைத் திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளது. (ச-இ)



யாழ்.வடமராட்சி கிழக்குக் கரையோரப் பகுதிகளில் காணப்பட்ட குப்பைகள், பருத்தித்துறைப் பிரதேசசபையால் கடந்த ஞாயிற்றுக்கிழமை அகற்றப்பட்டு தூய்மைப்படுத்தப்பட்டன. மக்கள் வைத்த கோரிக்கைக்கு அமைவாக இந்தத் துப்புரவாக்கல் பணி முன்னெடுக்கப்பட்டது. (எ-41-27)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜன.22

'வடலியம்மன்' என அழைக்கப்படும் சுன்னாகம் மயிலணி முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல்10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்தும் 11 தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக இடம்பெறவுள்ள ஆலய மஹோற்சவப் பெருவிழாவில் எதிர்வரும்30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் சப்பறத் திருவிழாவும், 31ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் தேர்த்திருவிழாவும், அடுத்த மாதம் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் தீர்த்தத்திருவிழாவும், அன்றைய தினம் மாலை 4 மணியளவில் கொடியிறக்க உற்சவமும் இடம்பெறுமென ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-66)

## திறப்பு விழாவும் பொங்கல் விழாவும்

*யாழ்ப்பாணம், ஜன.22*

*யாழ். ஊரெழு கணேசவித்தியாசாலையில் புனரமைக்கப்பட்ட அதிபர் அலுவலகத் திறப்பு விழாவும் தைப்பொங்கல் விழாவும் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளன. பாடசாலை மண்டபத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வுவை பாடசாலை அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமை தாங்குவார். நிகழ்வில் பிரதம விருந்தினராக கனடா நலன்விரும்பி சபா. வசந்தன், சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் துரை. துஷ்யந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)*

## 'பொறுப்பான டிஜிற்றல் சமூகம்' யாழ்ப்பாணத்தில் பயிற்சிமுகாம்

கொழும்பு, ஜன.22

'யுனிசெப்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் 'சொண்ட்' நிறுவனம் முன்னெடுக்கும் 'சமூக ஒற்றுமைக்கான பொறுப்பான டிஜிற்றல் சமூகம்' எனும் திட்டத்தின் கீழான விசேட பயிற்சி முகாம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

கடந்த 19ஆம் மற்றும் 20ஆம் ஆகிய திகதிகளில் இந்தப் பயிற்சி முகாம் இடம்பெற்றது.

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் சமூக மட்டப் பிரதிநிதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 40 பயிற்றுவிப்பாளர்கள் இதில் பங்கேற்றனர்.

பயிற்சிநெறித் திட்டத்தின் மாகாண இணைப்பாளர் திருமதி தி. நிருபாவின் வரவேற்புரையுடன் நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து, யுனிசெப் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமதி எஸ். சர்மிலி திட்டத்தின் நோக்கம் குறித்த அறிமுக உரையை வழங்கினார். 'சொண்ட்' நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ச. செந்துராசா தலைமையுரையாற்றிப் பயிற்சியைத் தொடக்கிவைத்தார்.

இதன்போது டிஜிற்றல் தளங்களில் எவ்வாறு பொறுப்புடன் நடந்து கொள்வது, சமூக ஒற்றுமையைப் பாதிக்கும் விடயங்களைக் கையாளுதல் மற்றும் இணைய வெளியில் சிறுவர் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன. (ச-26)

**வேலையாட்கள் தேவை**

AD ரைவர்
கூலி ஆட்கள்

தொடர்பு: 077 254 3569
021 222 8367

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகாமையில் 4 ஆம் குறுக்கு வீதியில் 2 3/4 பரப்பு சகல வசதிகளுடன் கூடிய வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:
076 575 3315
074 172 8041

(CS 60518) E

## கலைப்பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜன.22

பருத்தித்துறை பிரதேசசெயலக பிரிவின்கீழ் அமைந்துள்ள பசுபதீஸ்வரர் திருமண மண்டபத்திலும் பொலிகண்டி கிழக்கு மருதாம்புலம் பத்திரகாளி அம்பாள் கலைப்பயிற்சி நிலையத்திலும் பயிற்சிநெறி வகுப்புகள் இடம்பெற்று வருகின்றன.

பருத்தித்துறை பிரதேசசெயலகமும் இந்து சமய கலசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து வார இறுதி நாள்களில் மாணவர்களுக்கு யோகாசனம், நடனம், சங்கீதம், வயலின் மற்றும் மிருதங்க வகுப்புகளை நடத்துகின்றன.

இந்தப் பயிற்சிநெறிப் பாடத்திட்டமானது வட இலங்கை சங்கீத சபை பரீட்சைப் பாடத்திட்டத்துக்கு அமைவாகவே நடைபெறுகின்றது. 2026 ஆம் ஆண்டில் புதிதாக இணைய விரும்பும் மாணவர்களின் சுயவிவ ரத்தைப் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

## யோகா பயிற்சி

யாழ்ப்பாணம், ஜன.22

மானிப்பாய் அன்னாள் அருணோதய மன்ற அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவுள்ள யோகா பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ச்சியாக சுமார் மூன்று மாதங்கள் வரை நடைபெறவுள்ளன.

மன்றக் கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி வகுப்புகளில், யோகாக்கலை பற்றிய விளக்கமும், நோய்கள் குணமாக என்னென்ன யோகாசனங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பிலும் யோகாக்கலையுடன் சுவாசப் பயிற்சி வகைகள் மற்றும் தியானப் பயிற்சியை மேற்கொள்வது தொடர்பிலும் விரிவான செய்முறை விளக்கங்கள் வழங்கப்படும். இந்தப்பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்பவர்களுக்கு பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இந்தப் பயிற்சி வகுப்பில் ஆண், பெண் இருபாலரும் கலந்துகொள்ளலாம். பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளவர்கள் 0777448076 எனும் தொலைபேசி இலக்கங்கத்துக்குத் தொடர்புகொண்டு மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் [illegible] இல் உள்ள அவர்களது பணிமனையில் 22.01. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org